[Sri M. Bhaktavatsalam] [9th September 1959

வேண்டும் என்ற அக்கறை இல்லை. கோவிலுக்குச் சென்று ஆண்டவனைத் தொழவேண்டும் என்றுதான் நினைக்கிறார்கள். அதனால் தாங்கள் சிறிய வாழ்க்கை நடத்த பயன்படும் என்று எண்ணுகிறார்கள். கனம் அங்கத்தினர் ஜகன்னாதன் வேண்டுமானால் இதைப் பற்றி கண்டிக்கலாம். ஆனால் அரிஜனங்களின் சார்பாக நான் அவர்களுடைய மனோபாவத்தைத் தெரிவிக்கும் முறையைக் கண்டு வருந்துகிறேன்.

ஆலயங்களில் வேலை செய்யும் ஊழியர்களைப் பற்றி கூறப்பட்டது. அவர்களைப்பற்றி எனக்கு மிகுந்த கவலை உண்டு. அங்கே வேலைசெய்கிறவர்களைப் பார்த்து சிலர் பொறாமைப்படுகிறார்கள். அர்ச்சகர் வேலை செய்வதைப் பார்த்தால்தான் தெரியும். ஒரு பக்தியின் காரணமாகத்தான் அவர் அந்த குகையில் வேலை செய்ய முடிகிறது. அவர்களுக்கு குறைந்த சம்பளம்தான் கொடுக்கப்படுகிறது. அந்த சம்பளங்கள் பழைய காலத்தில் ஏற்பட்டவை. அவை சரியல்ல. அதை மாற்றவேண்டும். இப்பொழுது நிதி நிலைமை இடம் கொடுக்கவில்லை. பெரிய கோயில்களில சம்பளத்தை அதிகமாக்க வேண்டும். எல்லா ஆலயங்களிலும் அதிகமாக்குவதற்கு வகை செய்ய வேண்டும். கோயில்களின வருமானத்தை அதிகப்படுத்தியாவது அவர்களுக்கு அதிக சம்பளம் கொடுக்கவேண்டும். எனக்கும் இந்தக் கவலை இருக்கிறது. இதைப்பற்றி நான் கவனிப்பேன் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மடங்களில் தவறுகள் நடக்கின்றன. எல்லா மடங்களும் சரிவர இயங்கவில்லை என்று நான் சொல்லவில்லை. கனம் அங்கத்தினர்களும் அவ்விதம் கருதவில்லை என்றுதான் நினைக்கிறேன். சில மடங்களில் தவறுகள் ரொம்பவும் நடக்கின்றன. அதே சமயத்தைச் சேர்ந்தவர்கள் வெட்கித் தலை குனியக் கூடிய வகையில் அவைகள் இருக்கின்றன. அவைகளைப் போக்க வேண்டும் என்றுதான் என்னுடைய கவலையும். சட்டம் எவ்வளவு தூரம் இடம் கொடுக்கிறது என்று சிலர் சொன்னார்கள். கான்ஸ்டிடியூஷனையும், கோர்ட்டு தீர்ப்புகளையும் வைத்துக்கொண்டுதான் இந்த மசோதா தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதில் சலுகை ஒன்றும் இல்லை. சட்டத்தின் கீழ் ஏதாவது தவறுகள் செய்தால் சீக்கிரத்தில் திருத்த முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இதற்காக அதிகாரிகள் பாடுபடுவார்கள். உத்தியோகப்பற்றற்றவர்களும், பொது மக்களும், போதிய அளவு அவர்களுடைய ஒத்துழைப்பைக் கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் இந்தச் சட்டத்தை சீரிய வகையில் நடத்த முடியும் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The question is . . . .

Sri M. Jagannathan rose.

DEPUTY SPEAKER : The hon. Member should resume his seat when the Chair is on its feet.

The question is—

"That the Madras Hindu Religious and Charitable Endowments Bill, 1959 (L.A. Bill No. 7 of 1959) as amended be passed."

The motion was put and carried and the Bill was passed.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

1-38 a.m. The House then adjourned.

VI.—PAPER LAID ON THE TABLE OF THE HOUSE.

B.—Reports, Notifications and other papers.

53. *Details of First Supplementary Estimates for 1959-60.*